சார்பு நீதிமன்றம், இலால்குடி

OS.No. 173/19

2020-ம் ஆண்டு திங்கள் கிழமை பிப்ரவரி 03-ம் நாள் PW1 சாட்சியான வாக்குமூலம். 54வது விதிகள் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.ஆர்.ராம்குமார் உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி தெரிவிக்கப்படுகிறது.

பெயர் =நாராயணன் என்ற நாராயணசாமி

த/பெ =

வயது =

ஊர் =

வட்டம் =

மாவட்டம் =

<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>

05.10.1967 தேதியில் என்னுடைய தகப்பனார் அவருக்காகவும் நான் உள்ளிட்ட அவருடைய வாரிசுகளை கட்டுப்படுத்தியும் சாமி கவுண்டர் மற்றும் ரெங்கசாமி ஆகியோருக்கு எழுதிக்கொடுத்த கிரயப் பத்திரத்தின் பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல் வா.சா.ஆ-1. என்னுடைய சகோதரி பங்காரு என்னுடைய தாயார் மெய்யம்மாளுக்கு எழுதிக்கொடுத்த பாகவிடுதலை பத்திரத்தின் பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல் வா.சா.ஆ-2. என்னுடைய முகவரியை காட்டக்கூடிய நான் செலுத்திவரும் காப்பீட்டுக்கான ரசீதுகள் 5 எண்ணம் வா.சா.ஆ-3ன்வரிசை.